✠ அன்பே கடவுள் ✠

# “திருப்பயணியின் குமுறலும் – கிறிஸ்துவின் பதிலிறுப்பும்”

- மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

## முதல் நிலை

### இயேசுவை சிலுவைச் சாவுக்குத் தீர்ப்பிடுகின்றார்கள்

**திருப்பயணி** : ஐயா சாமி என்ன எதுக்கு இந்த உலகம் இந்த பாடு படுத்துது?

நீ அப்படி நீ இப்படி, நீ அப்படி இருக்கனும், நீ இப்படியிருக்கனும், நீ அப்படி பேசியிருக்க கூடாது. நீ இப்படி பேசியிருக்கனும் என்று என்ன என்னா பாடு படுத்துது தெரியுமா?

போதும், போதும்னு இருக்கு, தாங்க முடியல.

தந்த ஒரு வாழ்க்கையையும் வாழ முடியல சாமி.

**கிறிஸ்து** : இப்ப புரியுதா? ராசா.

நீ அடுத்தவங்களை தீர்ப்பிடும் போது, அவங்களுக்கும் இப்படித் தானே இருந்திருக்கும்.

இதனாலதானே நான் சொன்னேன், நீ என்ன தீர்ப்பிடுகின்றாயோ, அதே தீர்ப்பை நீயும் பெறுவாய் என்று.

இனியாவது கவனமாக இரு. யாரையும் தீர்ப்பிட்டுக் கவலைக்கு உள்ளாக்காதே. நீயும் உன் பயணத்திலே கவலைப்படாதே.

## இரண்டாம் நிலை

### இயேசுவின் தோள் மேல் சிலுவை சுமத்தப்படுகின்றது

**திருப்பயணி** : ஐயா சாமி தாங்கலையா?

என்னமா இருக்கு. ரொம்ப பாரமாலா இருக்கு. நித்தம் நித்தம், நாளுக்கு நாள் பாரம் கூடத் தான் செய்யுது. எங்க கொண்டு போய் இறக்கி வைக்கப் போறேனோ, யாரு தான் எனக்கு உதவி செய்வாங்கனு தெரியலையே.

வயசு ஏற ஏற சுமையும் குறையாம ஏறிக்கிட்டுத் தான் போகுது.

**கிறிஸ்து** : பயணத்துல ராசா, பாரம் கூடிச்சுனா, பயணம் சுகமா இருக்காது.

பாரத்த குறைச்சுக்கோ, பயணம் சுகமா இருக்கும்லா.

இதுக்கு தானே நான் நற்கருணையைத் தந்தேன். உன்னுடைய பயணத்துல களைப்பு தெரியாம இருக்க என் சதையையே உனக்கு உணவாகத் தந்தேனே. அன்றாடம் பெற்றுக் கொள்கிறாயா?

உன் பாவத்த மன்னிக்க, இறக்கி வைக்க ஒப்புரவு அருட்சாதனத்த கருவியாகத் தந்தேனே, பெற்றுக் கொள்கிறாயா?

நட்பு, உறவு, குடும்பம் இவற்றைக் கொடையாக கொடுத்தேனே, பிறர் சுமைகளை தாங்கிக் கொள்ளத் தானே தந்தேன். நட்பை பேணி, உறவை வளர்த்து, குடும்பத்தைக் கட்டிக்காத்து வருகிறாயா?

கவனம் செலுத்து பாரம் குறையும், பயணமும் சுகமாகும்.

## மூன்றாம் நிலை

### இயேசு முதல் முறை கீழே விழுகின்றார்

**திருப்பயணி** : கீழ விழுந்துட்டேன் நல்ல வேளை யாரும் பக்கத்துல இல்ல.

மத்தவங்க பார்க்கிறதுக்கு முன்னாடி நானே எழுந்து விட்டேன்.

இருந்தாலும் கொஞ்சம் தர்மசங்கடமாகத் தான் இருக்கு? என்ன செய்ய சமாளித்து தானே ஆகனும். சமாளிக்கப் பார்க்கின்றேன்.

ஆமா நல்லாத் தானே போய்கிட்டு இருந்தது, எப்படி தடுமாறினேன்? எதுக்கு கீழே விழுந்தேன்?

**கிறிஸ்து** : நல்ல கேள்வி தான் ராசா,

வாலிபம் துள்ளுதுல, வயசு அப்படி, கண்ணுமண்ணு தெரியாம போறலாயா?

பார்த்துப் போ ராசா.

தெளிவா, உறுதியா, உண்மையா இருக்கறோமானு கேட்டுப் பார்த்துக்கோ, அப்பப்போ. இதுக்குத் தான், எப்பவும் விளையாட்டுப் பிள்ளையாகவே இல்லாம, கொஞ்சம் வாழ்க்கைல கவனமா, கோவிலுக்குப் பக்கம் வந்துட்டுப் போ.

விவிலியம் சொல்லுது, உன் வாலிப நாட்களில், உன்னைப் படைத்த கடவுளை நினைன்னு.

திரும்ப விழுந்துராம பார்த்துக்கோயா!

## நான்காம் நிலை

### இயேசு தன் தாயைச் சந்திக்கின்றார்

**திருப்பயணி** : ஐயா சாமி, இந்த அப்பா, அம்மான்னு சொல்லிக்கிட்டு இரண்டு பேரு இருக்காங்களே, தாங்க முடியலயா. நச்சரிப்புன்னா அப்படி இப்படியில்ல. எதுக்கெடுத்தாலும் உனக்காகத்தான், உன்னுடைய நலன்களுக்காத்தான்னு, சொல்லி சொல்லியே பிட்ட போட்டு போட்டு பாடா படுத்துராங்கயா.

பெத்துட்டா அதுக்காக இப்படியா பன்னுவாங்க.

இதுலவேற உம்ம வம்புக்கு இழுத்து, இயேசுவ பாரு பெற்றோருக்கும், மற்றோருக்கும் பணிந்த வாழ்ந்ததாலே, ஞானத்திலே, அறிவிலே வளர்ந்தார்ன்னு விவிலியத்த சொல்லிக் காட்டுறாங்க.

**கிறிஸ்து** : ஆமா ராசா, எனக்கும் கஷ்டமாத் தான் இருந்தது, கொஞ்சம் கூட புரிதலேயில்லாம, பெரிய மனுஷங்கட பேசிக்கிட்டு இருக்கிற பார்த்துட்டு, எங்க அம்மா அன்பு ஒழுக கேட்டாங்க பாரு, என்னயா இப்படிப் பண்ணிட்ட, நானும், உன்ன வளர்த்தவரும் உன்ன தேடி வரவச்சிட்டியேனு, என்னமோ நான் செய்யக்கூடாத குற்றத்த செய்தது போல.

என்ன பண்ணயா. பெத்த மனசு இப்படித்தான் பத்திக்கிட்டு வருது.

கூட இருக்கிற மனுசன்னோ, கல்லா இருந்தாலும் கருணையா கரிசனாயா ஆச்சிகூட ஐயரும் சேர்ந்தே சுத்துரத பார்த்தா ஒருவகையில சந்தோஷமாகத்தான் இருக்கு.

பெற்றோரைக் கணம் செய். பெற்றோருக்கு இழுக்கு வருவிக்காதேன்னு விவிலியம் சொல்லுது ராசா.

வயிற்றுல கனி கொடுத்துட்டு, வரத்தை நல்ல கனி கொடுக்கிற மரமா வளர்க்கிற பொறுப்பு அவங்களுக்கு இருக்குலயா, அதனால கொஞ்சம் புரிஞ்சிக்கிட்டு, அவங்க கண்ணீர் வடிக்காம பார்த்துக்கோ ராசா. உன் வாழ்க்கை ஆசீர்வாதமா இருக்கும்.

## ஐந்தாம் நிலை

## இயேசு சிலுவை சுமக்க சீமோன் உதவி செய்கின்றார்

**திருப்பயணி** : ஐயையோ, தேர இழுத்து, நடுரோட்டுல விட்டது போல,

நம்ம சும்மா இருக்கனும்னு இருந்தாலும், கிரகம் சரியில்லயே.

நம்ம நேரம் பாருங்க, நம்ம ஒதுங்கிப்போனாலும், நம்ம வாயிருக்கே வாயி அது நமக்கு வினையாகவே வந்து சேருது.

இழுத்துவிட்டு வேடிக்கைப் பார்க்கிற கூட்டமாத் தான் இருக்கு.

போதும் போதுமுனு இருக்கு சாமி.

நல்லது செய்யப் போயி, பொல்லாப்புத்தான் கிடைக்கு, எதுக்கு சாமி இந்த மானங்கெட்ட பிழப்புன்னு தோணுது.

அதுசரி ராசா அதுசரி.

**கிறிஸ்து** : இப்படியெல்லாரும் நினைச்சா என்னவாகும்?

நானும் இப்படியிருந்திருந்தா உங்களுக்கு எப்படிய்யா மீட்பு கிடைச்சிருக்கும்?

பொதுக்காரியத்துல பங்கெடுக்கனும்லா. கஷ்டம் இல்லாம வாழ முடியாதுயா ராசா.

நீதியின் பொருட்டு துன்புறுதல் என்பது கிறிஸ்தவத்தின் நியதித்தானேயா.

மறைத்திரு. ஸ்டேன் சுவாமிகள் இன்றைக்கு மறைக்கு சாட்சியாய் மரித்தார் என்றால் இந்த வகையில பயணித்தவர் தானே. அவருக்குப் பிள்ளைகள் இல்ல, குடும்பம் இல்லன்னு சொன்ன, ஆஸ்திரேலியா மருத்துவர் குடும்பம் எப்படி?

கிறிஸ்தவரா இருந்தா, இப்படி பொதுக்காரியத்துல பங்கெடுத்து, நீதிய, உண்மைய நிலைநாட்ட பாடுபட வேண்டும்.

நடுரோட்டுக்கு வர வேண்டியது அவசியமா இருந்தா, வந்தேயாக வேண்டும். நானும் வீதிக்கு வந்து போராடியவன் தானே. வா ராசா வா. வாய்ப்பை நழுவ விடாதே.

போராடும் குணம், அறத்துக்காய் போராடும் குணம் கிறிஸ்தவனுக்கு வேண்டும்.

## ஆறாம் நிலை

## இயேசுவின் திருமுகத்தை வெரோணிக்கா துணியால் துடைக்கிறார்

**திருப்பயணி** : வீதிக்கு வந்தா சந்தி சிரிக்கிறது.

வீட்டுக்குள்ள புரட்சி செய்தா? பூட்டி வைக்கிறது.

போராட வந்தா, பெண்ணுக்கு இது அழகு அல்லன்னு சொல்லுது.

பெண்ணுகள பிரிச்சே பார்க்கிறது இந்த உலகம். பெண்ணாலத் தான் பாவமே வந்துச்சுன்னு பேசுது உலகம்.

உங்களிலே குற்றமில்லதவர் முதல் கல் எறியட்டும்னு நீங்க சொன்னீங்க. எல்லாரும் ஒடிட்டாங்க. இன்றைக்கு எங்கள வைச்சே செய்தாங்க. தாங்களும் செய்யாம, எங்களையும் மூடராக்கி, மடையராக இருந்து, துணிவேயில்லாம, அடிமையாக இருந்து, எங்களையும் அடிமையாக்குராங்க.

**கிறிஸ்து** : கவலையேபடாதம்மா.

இதுக்குதாம்மா விவிலியத்துல பல பெண்களை அடையாளம் காட்டியிருக்கின்றேன்.

ஆணாதிக்க வர்க்கம் இப்படித்தான் பேசிப் பேசியே வீணாக போய்க் கொண்டேயிருக்கின்றது. கடைசியில நீ தந்த பெண்ணுதான் எனக்கு அந்தப் பழத்த கொடுத்தான்னு வாங்கித் தின்னுட்டு வாய்கூச பேசி நிக்கும்மா.

இதுக்குப் பயந்து போய்விடக் கூடாதும்மா.

எங்க அம்மா பாரு! என்ன ஒரு அற்புதமான பாடல, புரட்சிப் பாடல என்ன ஒரு அருமையாப் பாடியிருக்காங்க. செருக்கு கொண்டோர் சிதறிப் போவர். செல்வர் வெறுங்கையராக போவர். துணிந்து நிற்போருக்கு இறைவனின் கடைக்கண் பார்வை கிடைக்கப் பெறும் என்பதுவே உண்மை.

எல்லாத் தலைமுறையினரும் பேறுபெற்றவர் எனச் சொல்லுவர். பெண்களிலேயே பேறுபெற்றவராவர். நல்லதுக்கு, உண்மைக்குத் துணிவுகொள் தங்காய். உன்னுடன் நான் இருப்பேன்.

## ஏழாம் நிலை

## இயேசு இரண்டாம் முறை கீழே விழுகிறார்

**திருப்பயணி** : என்னதான் முயற்சி செய்தாலும் விழுந்துட்டேனே.

மற்றொரு முறையும் மண்ணை முத்தமிட்டு விட்டேனே.

சே! என்னவொரு கேவலமான பிழைப்பு. வெட்கக் கேடானச் செயலாகிப் போனதே.

விழாம தப்பித் கொள்ளத்தான் நினைத்தேன். முடியல

சரி எழுந்து நடப்பேன். பயணிப்பேன். மண்ணோடு மண்ணாக புழுதியிலே புரண்டுவிடமாட்டேன்.

உதவி செய்யும்யா.

**கிறிஸ்து** : மருளாதே. திகையாதே. கவலைப்படாதே.

மனிதர்கள் தானே. பலவீனமுண்டு. காற்றில் அசையும் நாணலைப் போன்றவர்கள்தானே.

விழாமலா வண்டி ஓட்டக் கற்றுக் கொண்டாய்? தோல்வியில்லாமலா வெற்றி கண்டாய்?

பின்னிழுத்து விடப்படும் அம்புதானே முன்னாக்கிச் செல்கின்றது.

இது இல்லயா மேட்டரு. நீ போக வேண்டிய தூரமுண்டு.

தடைகளை தாண்டிச் சென்று தான் , விழுந்து எழுந்து, உன்னை புழுதியாக்கிக் கொண்டால் தான் வெற்றியுண்டு.

கறைபடாத சட்டையும், சகதிபடாத கரங்களும், சேற்றை மிதிக்காத கால்களும், வாழ்வில் வெற்றி பெற்றது இல்ல.

வெற்றி பெற்றவர்கள் அத்தனைபேரும், வாழ்வில் முன்னேறிய அத்தனைபேரும் தடைகளைத் தகர்த்தவர்கள், விழுந்து எழுந்து பயணித்தவர்களே.

சேற்றினிலே சுகம் காண்பது எதுன்னு உனக்கு தெரியுமல்லவா.

எழுந்து! ஒளி வீசு. உலகிலே ஒளி வீசும் சுடர் தீபங்களாக துலங்குங்கள்.

## எட்டாம் நிலை

## இயேசு எருசலேம் பெண்களுக்கு ஆறுதல் கூறுகிறார்

**திருப்பயணி** : கண்ணீரே வாழ்க்கையாகிப் போச்சு.

கண்ணீரே, வற்றிப் போன கண்களே எங்களது சொந்தமாகிப் போச்சு.

இது வேண்டுமா, இன்னுமா இந்த உலகிலே வாழனுமானு கேட்கத் தோன்றுகின்றது.

எல்லாவகையிலும் நெருக்கடின்னா என்னதான் செய்வேன் நான்?

யாரிடம் போய் அழுவேன்?

கண்ணிலே தண்ணீரே வராத அளவுக்கு வற்றிப் போன கண்களோடு தான் எல்லாருமே பயணிக்கிறார்கள் என்றால், அழுவாரோடு அழ யாருண்டு உலகினிலே.

**கிறிஸ்து** : அழுவதிலும் சுயநலம் வேண்டும்.

எதற்கு அழுகிறோம் என்பதன் பொருள் தெரிந்து அழ வேண்டும்.

பாவத்துக்காக அழுகிறாயா? பிறரது தவறுக்காக அழுகிறாயா?

செய்த பாவக் கறையை போக்கிக் கொள்ள அழுது கழுவிக் கொள்கின்றாயா?

கேட்டுப் பார். தன் பாவத்திற்காக, தரணியிலே இழைக்கப்படும் பாவத்திற்காக அழுகின்றவனின் கண்ணீர் விலைமதிக்க முடியாத ஒன்று.

விண்ணகத்திலே அதுவே விலையேறப் பெற்ற பரிசு. விண்ணவருக்கு அதுவே சிறந்த பரிசு. இப்பரிசே உன்னையும் விண்ணகத்துக்கு அழைத்துக் கொள்ளும்.

வாழும் போது கண்ணீர் வடிக்க கஷ்டப்படாதே, இஷ்டப்படு.

## ஒன்பதாம் நிலை

## இயேசு மூன்றாம் முறை கீழே விழுகின்றார்

**திருப்பயணி** : என்னய்யா வாழ்க்க. போதும்போதும்னு ஆகி விட்டது.

என்னதான் கவனமா இருந்தாலும், நடந்தாலும் மீண்டும் விழத்தானே செய்கின்றேன். இப்போ எழக்கூட திராணியில்லாம போயிட்டு.

பார்ப்போருக்கு ஏளனமாகிப் போனேன். பரிகாசம் செய்ய பாத்து, பரிதாபமாகிப் போகின்றேன். நம்மள வைச்சுலா காமெடி பண்ணுறாங்க.

ஆடுன ஆட்டத்துக்கு இப்போ விழுந்துதானே ஆகனும்னு சொல்லிச் சொல்லி பரிகசிக்கின்றார்கள்.

விழுந்த மண்ணிலேயே புதைந்து போகக் கூடாதான்னு தோணுது.

**கிறிஸ்து** : மண்ணிலே உன்னை உருவாக்கினேன். மண்ணிலே தான் புதைக்கப்படுவாய். ஆனா அதுக்கும் காலமும் நேரமும் உண்டு ராசா.

உன் இஷ்டத்துக்கு நீ அமரராகிக் கொள்ள சம்மதிக்கமாட்டேன். என்னுடைய காலமும் நேரமும் வரணும்.

ஒவ்வொருவருக்கும் ஒரு நோக்கம் உண்டு. ஒவ்வொருவருக்கும் ஒரு இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு இருக்கு. இவையெல்லாம் முன்கூட்டியே திட்டமிடப்பட்டு, தீர்மானிக்கப்பட்டது.

அதனால களைப்படையாதே. எழுந்து பயணப்படு. எதிர்நோக்கி செல்லும் இலக்கை எட்டும் வரை பயணப்படு. இலக்கிலே தரப்படும் பரிசினைப் பெற ஆவலோடு, ஆசையோடு பயணப்படு. உன்னை வரவேற்க நான் அங்கு இருப்பேன்.

## பத்தாம் நிலை

### இயேசுவின் ஆடைகளைக் களைகின்றார்கள்

**திருப்பயணி** : என்னய்யா உலகமிது. விட்டா உள்ளாடையையும் உருவிட்டு விட்டு விடுவாங்க போல தெரியுது. அடுத்தவன் வெற்றுடலைக் கண்டு களிப்படையும் உலகமாக இருக்கிறதே இந்த உலகம்.

மானத்த கூட, தன்மானத்த கூட, காப்பாத்த முடியாதுபோல இந்த உலகத்துல.

மானத்த இழந்து மரியாதையை இழந்து வாழ்வதும் ஒரு வாழ்வா இறைவா!

போதும் வாழ்ந்தது போதும்.

ஐயகோ! அன்றாடம் எத்தனை பாலியல் குற்றங்கள் அதுவும் குழந்தைகளை சாமி, கசக்கிச் சாகடிக்கிறார்களே! இதுல வேற பொய்க் குற்றம் சாட்டி, போக்சோவுல கைது நடவடிக்கை மனசாட்சியை மழுங்கடித்த வாழ்க்கையாகவே இது இருக்கின்றது. திருந்துவார்களா இறைவா?

**கிறிஸ்து** : மானமே இல்லாத மக்கள் கூடத்துல மானத்த காக்க நினைத்தால், எப்படி?

தன்மானமே இல்லாது தானே மக்கள் விலைபோகிறார்கள்.

இதிலே மானத்த காக்க நினைப்பவனின் வாழ்க்கை பரிதாபம் தான்.

மானமே இல்லாது, மரியாதையே இல்லாது, “இவன் வேண்டாம் கள்வனே வேண்டும்” என கூக்குரலிட்ட கூட்டத்தில் என் தன்மானத்தைத் தொலைத்தேன் என்பதுதானே உண்மை.

மான மரியாதையில்லாத மக்கள் மத்தியில் வாழ்கின்றோம் என்பதனைப் புரிந்து, மானம் காக்கும் போராட்டத்தில் மனம் உடைந்து போகாது, பயணிக்க பழகிக் கொள் மனிதா!

## பதினொன்றாம் நிலை

### இயேசுவைச் சிலுவையில் ஆணிகளால் அறைகிறார்கள்

**திருப்பயணி** : ஐயா சாமி, இந்த உலகத்துல மனிதர்கள் தங்களது பார்வையில மத்தவன பார்த்து, அவன கட்டம் கட்டிப் புறக்கணித்து, ஓரங்கட்டி விடுகின்றது.

இவன் இப்படித் தான், இவன் நமக்கு எதிராளி, இவன் அவங்க கூட்டத்தைச் சார்ந்தவன், இவன் ஒத்து வரமாட்டான், இப்படி மனிதர்களைக் கட்டம் கட்டி ஓரங்கட்டி, தன்னையும் ஒரு வட்டத்துக்குள்ளாக இருத்திக் கொள்கின்றானே, இதுக்கு என்னதான் தீர்வு?

**கிறிஸ்து** : அகன்ற பார்வையில்லாது, சுருங்கிய இதயத்தோடு பயணிக்கும் மனிதனின் மனம் செய்யும் வேலையே இது.

அடுத்தவனைக் கட்டம் கட்டும் மனிதன் தனக்குத் தானே வேலியிட்டுக் கொள்கின்றான் என்பதனை உணராது இருப்பது வேதனையானதே.

என்னையும் இப்படித் தான் கட்டம் கட்டித் தான் என்னுடைய பரந்துபட்ட பணியினை முடக்கிப் போட்டு என்னை அறைந்தார்கள்.

ஓரங்கட்டி, ஒதுக்கி, புறக்கணித்தனர்.

மற்றவர்களால் நாம் கட்டம் கட்டப்பட்டு விட்டோம் என இருந்து போய் விட்டால், நம்முடைய பணியினை, இலக்கினை நாம் ஒருபோதும் அடைந்திட முடியாது.

கட்டத்தையும் தாண்டி நின்று பணி செய்து பயணத்தை தொடர்வது தான் அவசியமானது, அறிவார்ந்தமும் ஆகும்.

## பன்னிரண்டாம் நிலை

### இயேசு சிலுவையில் உயிர் துறக்கிறார்

**திருப்பயணி** : மரணம் மனத்தைப் பிளந்து விடுகின்றது. சிலரின் சாவு வாழ்வையே கேள்விக் குறியாக்கி விடுகின்றது. சொந்தங்களின் சாவோ தீராத சோகத்தையே வருவிக்கின்றது. சிலரின் அநியாயச் சாவு (ஸ்டேன் சாமி போன்றோர்) (உம்மையே கடவுள்) நீர் இருப்பது உண்மையா? என்று கேட்கச் செய்கின்றது. வாழ்விலே புலம்பலே, வேதனையே, வாழ்வாகிப் போகின்றதோ என்று நினைக்கச் செய்கின்றது.

சில குடும்பங்களில், அவர்களது உணவுக்கான வழிவகை செய்து தருவோரின் மரணம் குடும்பத்தின் மொத்த வாழ்வையே சூனியமாக்கி நிற்கின்றது என்பதுவே யதார்த்தம். மரணம் ஒரு பேரிடையாக இருக்கின்றதே.

**கிறிஸ்து** : மரணத்தைக் குறித்த தெளிவு வேண்டும், நண்பா!

மரணத்தைப் படைக்கும் போது, வருவிக்கவில்லை. எல்லாரும் இருக்க வேண்டும் என்பதுவே எனது விருப்பம். யாருடைய அழிவிலும் மகிழ்ச்சியடைய மாட்டேன் நான். அழிவது என் படைப்பில் உறுதியென்றால், அழியாத என் சாயலை மனிதனுக்கு நான் கொடுத்திருப்பேனோ? சாஞா 01: 13, 14

பாவத்தால் சாவு நுழைந்தது. சாத்தானின் சூழ்ச்சிக்கு அடிமையான மனிதனால் சாவு வந்தது. சாஞா 02 : 23, 24

என் மரணத்தால் அந்த சாவுக்கு சாவு மணியடித்தேன். எனவே மரணம் உண்டு. ஆனால் மரித்தோரின் வாழ்வு மாறுபடுமே தவிர அழிவதில்லை என்பதனை உணர்ந்து மரணமும் மறு வாழ்வின் பிறப்பே என்பதனை உணர்ந்து கொள். நானே, என் வாழ்வே அதற்கு சாட்சி.

## பதிமூன்றாம் நிலை

### இயேசுவின் உடல் அவரது தாயின் மடியில் வளர்க்கப்படுகின்றது

**திருப்பயணி** : துறவற வாழ்வு பல இன்னல்களோடு கூடியதே. இல்லற வாழ்வு போராட்டங்கள் நிறைந்தது, அதனால் திருமணம் செய்யாதிருப்பதே சிறப்பு என பவுல் அறிவுறுத்துகின்றார் என்றால், இந்த வியாகுலங்கள், போராட்டங்கள், சோதனைகள், வேதனைகள் மனித வாழ்வின் அத்தியாவசியமானது தான்னா?

போராட்டம் இல்லாத வாழ்வை கற்பனை செய்து கூட பார்க்க முடியவில்லையே, ஏன்?

வியாகுலங்களே மனித வாழ்வில் தவிர்க்க முடியாததாகிப் போனதே? ஏன்?

**கிறிஸ்து** : மனிதா! மனிதனைப் (படைப்பை) படைத்தவன் சோதித்துத் தான் பார்க்க வேண்டும், என்பதல்ல. உங்களது தீச்செயல்களே உங்களுக்கும் படைத்தவராகிய எனக்கும் பாரதூர வித்தியாசத்தை வருவிக்கின்றது.

பச்சை மரத்திற்கு அந்த பாடுகள் என்றால், பட்டமரத்திற்கு என்ன நேரும் என கேட்டுப் பார்க்கச் சொன்னேன்.

மனித பாவங்களே, மனிதர்களை வியாகுலங்களுக்கு உள்ளாக்குகின்றது.

“பல வேதனைகள் வழியாகவே இறையாட்சிக்கு உட்பட வேண்டும்“ என்பதனை பவுலும், பர்னபாவும் சொல்லித் தானே சீடர்களை உறுதிப்படுத்தினார்கள் என்கிறார் திருத்தூதர் பணி ஆசிரியர் லூக்கா.

வியாகுலங்களை, போராட்டங்களைக் கண்டு மரியன்னை அஞ்சி ஒதுங்கிக் கொள்ளவில்லை என்பதனை உணர்ந்து கொள் மனிதா!

## பதினான்காம் நிலை

## இயேசுவின் உடல் கல்லறையில் அடக்கம் செய்யப்படுகின்றது

**திருப்பயணி** : போர்களும், வன்முறைகளையும், ஆணவக் கொலைகளையும், அநியாயமான மரணங்களையும், தொற்றுநோய்களின் மர்மத்தையும் அதனால் ஏற்படுகின்ற மரணங்களையும் இதன் விளைவாக நடக்கின்ற அடக்கங்களையும் பார்க்கின்ற போது, இறைவா நீர் இருக்கின்றீரா, பார்க்கின்றீரா? செயல்படுகின்றீரா? என்றே கேட்கத் தோன்றுகின்றது.

எத்தனை விதமான சாவுகள்? எப்படியெல்லாமோ கொத்து கொத்தாக மரணிக்கின்றார்களே மனிதர்கள். அடக்கங்களும் கூட கொத்து கொத்தாகத்தானே அரங்கேறுகின்றது.

இவையெல்லாமே உம் பார்வையில்தான் நடக்கின்றதா?

உம் அனுமதியோடுதான் நடக்கின்றதா? நம்பிக்கை குறைவுபடுகின்றதே இறைவா!

உம்முடைய திருவுளம்தான் நடக்கின்றதா? இல்லை மனிதர்களின் மிருகஉணர்வுகள் விஞ்சி நிற்கின்றனவா?

**கிறிஸ்து** : மனிதா!

நியாயமானதே உன் கேள்விகள்.

உண்மையானதே உன்னுடைய உணர்வுகள்.

என் பொறுமைக்கு எல்லையில்லை என்பதுவே உண்மை. என் பரிவுக்கும் எல்லையில்லை என்பதுவே உண்மை.

எல்லாமே என் திருவுளத்தாலேயே நடக்கின்றது. நம்பிக்கை கொள்.

அடக்கப்பட்ட நானே மூன்று நாட்கள் தந்தையின் திருவுளத்திற்கு காத்திருந்துதானே வெற்றி வாகை சூடினேன். உயிர்ப்பிக்கச் செய்தேன்.

எல்லாவற்றிக்கும் ஒரு காலம் உண்டு என்பதனை நம்பு.

பொறுமையாக இரு. அநியாயக்காரர்கள், அக்கிரமக்காரர்கள், அடாவடிக்காரர்கள் அடங்கிப் போகும் காலம் உண்டு. நம்பு, வெற்றியைக் காண்பாய். உன் கண்ணெதிரே உன் எதிரிகளின் சாவைக் காண்பாய் என்றுதானே விவிலியம் கூறுகின்றது.

நம்பினவர்களின் நம்பிக்கை வீண் போகாது.

மன்றாடினவரின் மன்றாட்டு மறுக்கப்படாது.

தந்தையாம் கடவுளின் பொறுமையை மீட்பு எனக் கருதுங்கள். 02 பேதுரு 03:15